Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஹூ மாசி ௴ 30 உ வியாழக்கிழமை [14-03-1991] UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 107

# இந்திய நாடாளுமன்றம் நேற்றுக் கலைப்பு!



## காபந்துப் பிரதமராக சந்திரசேகர்
## மே இறுதியில் இடைக்கால பொதுத்தேர்தல்

புதுடில்லி, மார்ச்14

இந்தியாவின் ஒன்பதாவது நாடாளுமன்றம் நேற்றுக் கலைக்கப் பட்டது.

நாடாளுமன்றத்திற்கான இடைக்காலப் பொதுத் தேர்தல் மே மாத இறுதியில் நடைபெறும். புதிய அரசு அமைக்கப்படும் வரை திரு. சந்திரசேகரே காபந்து பிரதமராகச் செயற்படுவார்.

இந்தியாவின் எட்டாவது ஜனாதிபதி திரு. இராமசுவாமி வெங்கடராமன் நாடாளுமன்றக் கலைப்பு பற்றிய உத்தரவை நேற்று வெளியிட்டார்.

பத்தாவது நாடாளுமன்றம், பொதுத் தேர்தலுக்குப் பிறகு எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி அமைக்கப்படும் என்று ஜனாதிபதி அலுவலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ராஜ்ய சபையின் கூட்டம் நேற்று ஒத்திவைக்கப்பட்ட ஒரு மணி நேரத்துக்குள் நாடாளுமன்றக் கலைப்பு அறிவித்தல் வெளியிடப்பட்டது.

ஒன்பதாவது லோக சபைக்கான பொதுத் தேர்தல் 1989 நவம்பர் மாதம் நடைபெற்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கந்தளாயில் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

கடந்த திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் கந்தளாய் குளத்தடிப் பகுதியில் வைத்து எதிர்பாராதவிதமாக இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே சண்டை மூண்டது.

இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரியவரவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் வருணன் [கிளிவெட்டி, மூதூர்] வீரமரணம் அடைந்தார். [ஒ]

## கருணாநிதி வரவேற்பு

சென்னை, மார்ச் 14

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி வரவேற்றார்.

"கடந்த ஒரு வாரகாலமாக பல ஊகங்களுக்கும் கட்சிகள் வியூகங்கள் அமைக்கவும் வழிவகுத்த காலத மதத்திற்கு இன்றோடு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிட்டது"— என்றும் திரு. கருணாநிதி சொன்னார். [ஒ-எ]

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, மார்ச் 14

வவுனியா மாவட்டத்தில் சில பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை முதல் மாலை வரை அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு விட்ட போதிலும்—

அம்மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் தொடருவதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## வவுனியா கண்ணியில் 3 இராணுவத்தினர் பலி!

லண்டன், மார்ச்14

நேற்று வவுனியாவில் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி மூன்று இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்

கொழும்பு இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி. பி. ஸி இவ்வாறு அறிவித்தது.

விடுதலைப் புலிகளின் நிலைகளை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீதே கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## வ. பி. போ. ச. ஊழியர்கள் தென்பகுதிக்கு இடமாற்றம்?

### வடபகுதி டிப்போக்கள் மூடப்படலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார், வவுனியா டிப்போக்களைத் தவிர்ந்த ஏனைய ஐந்து டிப்போக்களைச் சேர்ந்த ஊழியர்களை தென் பகுதிக்கு இடமாற்றம் செய்ய முடிவு செய்திருப்பதாக அறிய வருகிறது.

வ. பி. போ. சபை ஊழியர்களுக்கு கடந்த அக்டோபர் மாதம் முதல் சம்பளம் வழங்கப்படாதது குறித்து கோண்டாவில் டிப்போ அதிகாரிகள் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தியபோது மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் மேற்கண்டவாறு கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர், கோண்டாவில் அதிகாரிகளிடம் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

★ வவுனியா, மன்னார்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



பஸ் டிப்போக்களை மூடிப் போட்டு, ஆக்களை வீட்டை அனுப்பிறது எண்டு அரசாங்கம் முடிவு எடுத்திட்டுது போலை......!

## கும்புறுப்பிட்டியில் 5 தமிழர் வெட்டிக் கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 14

திருகோணமலை மாவட்டம் கும்புறுப்பிட்டியில் கடந்த 3 ஆம் திகதி இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இணைந்து தமிழ் மக்களின் வீடுகளில் புகுந்து ஐவரை வெட்டிக் கொலை செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொலையுண்டவர்களில் மூவர் ஆண்கள். இருவர் பெண்கள்.

ரி. கார்த்திகேசுப்பிள்ளை [65 வயது], வி. கதிரவேலுப்பிள்ளை [58 வயது], எஸ். முனியாண்டி [56 வயது], கே. உதயராணி [15 வயது], யோகராணி ஆகியோரே

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தாண்டிக்குளம் பகுதியில் நேற்றும் கடும் சண்டை

வவுனியா—தாண்டிக்குளம் இராணுவத்தினர் நேற்றுக் காலை 8 மணியளவில் முகாமைவிட்டு வெளியேறிய சமயம் கடும் மோதல் மூண்டது.

சண்டை நடந்து கொண்டிருந்த போது மரக்காரம்பளை பகுதியில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. அப்பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் வீச்சும் மேற்கொள்ளப்பட்டது.

ஒரு மணிநேர கடும் சண்டையின் பின்னர் படையினர் பின்வாங்கிச் சென்றதாகவும் திரும்பும் வழியில் செல்லையர் புதுவீதியில் நான்கு வீடுகளை படையினர் எரித்துவிட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-5]

## ஆறாம் கட்ட நிவாரணம் நாளை முதல் கிடைக்கும்

யாழ். மாவட்டத்தில் ஆறாம் கட்ட உலர் உணவு நிவாரண விநியோகம் நாளை முதல் ஆரம்பிக்கப்பட இருப்பதாக நேற்று செயலகத்தால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அ', 'இ' அட்டை உள்ளவர்களுக்கு இலவசமாகவும், 'உ' அட்டை உள்ளவர்களுக்கு பணத்துக்கும் பொருள்கள் விநியோகிக்கப்படும்.

ப. நோ. கூ. சங்கங்களுக்கு செயலகத்தால் அனுப்பப்பட்ட சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின் பிரகாரமும் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கும் விநியோகம் இடம்பெறவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் கட்டத்தில் வழங்கப்பட்ட அளவு பொருள்களே இம்முறையும் வழங்கப்படும்.

## தங்கத்தை விழுங்கிய 10 ஈழத்தமிழ் இளைஞர்கள்

சென்னை, மார்ச் 14

தங்கத் துண்டுகளை வயிற்றுக்குள் விழுங்கி அவற்றைக் கடத்திக் கொண்டு வந்ததாகக் கூறப்படும் பத்து இலங்கைத் தமிழ் இளைஞர்கள் சென்னை விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வாழைப் பழங்களில் தங்கத் துண்டுகளை பதித்து அவற்றை இந்த இளைஞர்கள் விழுங்கியிருந்தனராம்.

இவர்கள் மீது எத்தகைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பற்றி அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## அடிப்படை உரிமையை பேணும் கடப்பாடு அரசுக்கே உண்டு

### சர்வதேச மன்னிப்புச் சபை பதிலடி

கொழும்பு, மார்ச் 14

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் அடங்கியுள்ள அடிப்படை அம்சங்களைப் பேண வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கே உண்டு.

இதனை உணராமல், ஸ்ரீலங்கா அரசு அடிப்படை உரிமைகளை தானே மீறிக் கொண்டு, மன்னிப்புச் சபை மீது பிழை பிடிக்கப் பார்ப்பது தவறானதாகும்.

சர்வதேச மன்னிப்புச் சபை ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு ஆகப் பிந்தி அனுப்பிய கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் மனித உரிமைகளை மீறு

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதம் புதிய சவரி 5 அந்தர் [250 K G] மேடைத் தராசு உடன் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு மல்லிகா கூல் பார், சந்தையடி, மானிப்பாய். [14916]

### ஏல விற்பனை

இரண்டு பசு ஒரு கன்று ஒன்றும் 1991-03-16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு, சங்க வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கல்லூரி வீதி, திருநெல்வேலி. [5846]

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S. ஜெயராஜா, C/o S. சச்சிதானந்தம், கிராம சேவை உத்தியோகத்தர், உடுவில். [உடுவில் மகளிர் பாடசாலைக்கு முன்பாக]. [16050]

### ரைப்ரைட்டர்கள்

Typewriters:- தமிழ் - ஆங்கிலம் வாங்கவும் விற்கவும். சிறந்த முறையில் திருத்தவும், எல்லாவித தட்டச்சு இயந்திரங்கள், உதிரிப் பாகங்களுக்கும் FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் குறுக்கு, யாழ்ப்பாணம். [பஸ் நிலையம் முன்பாக] [சி 5835]

### குடும்ப ஆலோசனை

பெற்றோர்-பிள்ளைகள், கணவன், மனைவி உறவு முறிவுகள், திருமணம், மறுமணம், விவாகரத்து, ஓய்வூதியம், சமூக சேவைகள் நிவாரணங்கள் போன்ற விடயங்களுக்கு ஆலோசனைகள் இலவசம். இரகசியம் பாதுகாக்கப்படும். திருச்செல்வம், குடும்ப ஆலோசகர், 52, செம்மணி வீதி, நல்லூர். [16104]

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை வீரசக்தி இராமநாதன் 235/1, ஏத்துக்கால் நீர்கொழும்பு முகவரியிடப்பட்ட கட்டடத் திணைக்களத்திற்கான ஒப்பந்தக்காரர் பதிவுப்புத்தகம் சிவப்பு மட்டையுடனானது. 12 ஆம் திகதி சுன்னாகம் - கச்சேரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [16105]

## விபுலாநந்தர் நூற்றாண்டு விழா

கொழும்பு, மார்ச் 14

சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்குரிய நடவடிக்கைகள் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு விழா 29-3-1992 இல் வருகிறது.

பேராசிரியராக, நூலாசிரியராக, கட்டுரையாளராக, இசை ஆசிரியராக தமிழுக்கு சுவாமி விபுலாநந்தர் ஆற்றிய அருந்தொண்டுகளை நினைவு கூரும் வகையில் விழா அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

---

# க. பொ. த. சாதாரண தரம்
# PRACTICE EXAM
# பயிற்சிப் பரீட்சை

1990 Dec இல் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குரிய மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை நடைபெற உள்ளது

★ யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் மாணவர்கள் இப் பரீட்சைக்கு தோற்றலாம். ஆனால் பரீட்சை நிலையங்கள் யாழ். மாநகர சபை எல்லையினுள்ளேயே அமையும்.

★ யாழ் மாநகர சபை எல்லை தவிர்ந்த குடாநாட்டின் வேறு பகுதிகளில் பரீட்சை நிலையங்களை அமைக்க விரும்பும் நிறுவனங்கள் கீழ்க் குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொண்டு அதனை ஒழுங்கு செய்யலாம்.

★ கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம், தமிழ் ஆகிய ஐந்து பாடங்களில் மட்டுமே இப் பரீட்சை நடைபெறும்.

★ 20-03-91 இற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து பரீட்சைக் கட்டணமாக ரூபா 50 செலுத்துதல் வேண்டும்.

தாமதமாக வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

★ பரீட்சைக்கான நேர அட்டவணை, சுட்டெண், பரீட்சை நிலையம் போன்ற விவரங்கள் அடங்கிய அனுமதி அட்டை மாணவர்களுக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

★ தகுதி அடிப்படையில் பரிசுகள் வழங்கப்படும்.

ஐந்து பாடத்துக்குரிய மொத்தப் புள்ளிகளில் அதி கூடுதலான கூட்டுத் தொகையைப் பெறுபவருக்கு தங்கப்பதக்கமும், ஒவ்வொரு பாடங்களிலும் கூடுதலான புள்ளியைப் பெறுபவர்களுக்கு விசேட பரிசுகளும் வழங்கப்படும்.

## EXAMINATION UNIT
## UNIVERSAL
KANTHARMADAM, JAFFNA.

★★ பரீட்சை மேற்பார்வையாளர்களாக, வினாத்தாள் திருத்துபவர்களாக கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்கள் இத்துறையில் தமது அனுபவம், தகைமை போன்றவற்றைக் குறிப்பிட்டு 20-03-91 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். [சி-5843]

---

# மகாபொல கொடுப்பனவு

## 3ஆம், 4ஆம் தவணைப் பண மேலதிகக் கொடுப்பனவும் (தை/மாசி 91)
## 5ஆம், 6ஆம் தவணைப் பணமும் (பங்குனி / சித்திரை 91)

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செய்யப்படும்.

**3ஆம் 4ஆம் வருடம்**

| | | |
|---|---|---|
| கலைப் பிரிவு | 13-3-91 | பி.ப. 1-30-3-00 |
| வர்த்தகப் பிரிவு | 15-3-91 | |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 18-3-91 | |

**3ஆம், 4ஆம் வருடம்**

| | | |
|---|---|---|
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 13-3-91 | மு.ப 9-00-12-00 |
| பௌதீக விஞ்ஞானப் பிரிவு | 14-3-91 | |
| மருத்துவ பீடம் | 15-3-91 | |
| 5ஆம் வருட மருத்துவ பீடம் | | |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை.

பதிவாளர்.

[சி-5842]

---

# விசேட அறிவித்தல்

வெளிவாரி பட்டமானிப் பரீட்சைக்கான விசேட வகுப்புகள்

மீண்டும் ஆரம்பம்: 16 - 03 - 1991

**G.A.Q.** (92 Apr.) — **B.A.** (91 Dec.)

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]

[சி-5836]

---

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

யாழ். பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில்.

## Dip- in- Technology
## B. Sc. Degree

ஆகிய கற்கை நெறிகளில் பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் மேற்கொண்டு தொடருவது, நடைபெற்று முடிவுற்ற தேர்வுகளுக்குத் தோற்றுவது, மீள் பதிவு செய்வது போன்றவற்றிற்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கு

**17 - 03 - 1991 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு**

பிராந்திய நிலைய அலுவலகத்திற்கு மாணவர் பதிவுப் புத்தகம், கடைசியாகக் கிடைத்த வவுச்சர்களுடன் தவறாது சமுகம் தரும்படி வேண்டப்படுகின்றனர்.

மு. தில்லைநாதன்,
உதவிப் பணிப்பாளர்.

[16111]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பிதழும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 18 | 12 |
| 05 | 02 |
| 1928 | 1991 |

## இராமன் பத்தன்

[யாழ் வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்]

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டு, அன்பின் திருவுருவாய் அருளின் உறைவிடமாய், வாய்மையின் சிகரமாய் விளங்கி, எம்மை வழிநடத்திய அன்புத் தந்தையே! தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

14-03-91இல் இந்திராபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி: சின்னமணி,
மகன்: தேவதாஸ் [பிரான்ஸ்]
மக்கள், மருமக்கள், மைத்துனர்மார்,
பேரப்பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினர்.

57, இந்திராபுரம்,
முகமாலை. [14927]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 - 12 - 1961

மறைவு: 14 - 03 - 1990

திதி: 19 - 03 - 1991

அமரர்

## அருந்தவாணி இராசையா

[அரச வைத்தியசாலை ஊழியர், தெல்லிப்பழை]

ஆருயிர்ச் சோதரியே!
அன்பிலே சிறந்து பழகும் பண்பிலே உயர்ந்து
அறிவுடை நம்பியாக குடும்பத்தில் விளங்கி
உற்றார், உறவினர் மெச்சிடும் வண்ணம்
வாழ்ந்த - தயா
தனை தரணியில் மறைந்து
ஆண்டொன்று கழிந்ததம்மா!

என்றும் உன் நினைவால் வாழும்:
சகோதர, சகோதரிகள்.

மீசாலை தெற்கு. [15679]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உணர்வது எப்போது?

திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் தமிழ் மக்களை இன்னற்படுத்தும் இராணுவ அட்டூழியங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இத்தனைக்கும் இப்பிரதேசங்கள் தமது கட்டுப்பாட்டில் உள்ளதாகப் படையினரும், அங்கெல்லாம் இயல்பு நிலை உண்டாகி தமிழர்கள் இடர் இன்றி அன்றாட வாழ்க்கையை நடத்துவதாக அரசாங்கமும் கூறி வருகின்றன. அவற்றை வெளியில் உறுதிப்படுத்திக் காட்டுவதற்காக அமைச்சர்களும், அதிகாரிகளும் அப்பகுதிகளுக்கு அடிக்கடி விஜயம் செய்து கொள்கிறார்கள்.

அரசாங்கம் கூறும் சிவில் நிர்வாகம் என்பதற்கு இராணுவக் கொடுமை நிறைந்த பாதுகாப்பில்லாத, நிம்மதி இல்லாத, அச்சத்துடன் கூடிய உயிராபத்து நிறைந்த வாழ்க்கை என்பதே வரைவிலக்கணம் ஆகிவிட்டது. இயல்பு நிலை என்றால் தமிழர்களைக் கண்டபடி கைது செய்து சித்திரவதை செய்வது அல்லது காணாமற் போகச் செய்வது என்பதாகிவிட்டது.

தமிழ்ப் பகுதிகளில் அரச நிர்வாகம், பாதுகாப்பைப் பலப்படுத்தல் என்பதெல்லாம் தமிழ்ப் பிரதேசங்களை இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தி அங்கு இராணுவ ஆட்சியை நடத்துவது என்பதே இப்போது நடைமுறை இயல்பாகி விட்டது.

கிழக்கில் சில இடங்களில் காலூன்றி விட்ட இராணுவம் தனக்கெனத் தனியான ஆட்சியை அங்கு நடத்தி வருகிறது. அரச அதிகாரிகள் இன்னொரு தனிமுறை ஆட்சி. அவை இரண்டுமே கிழக்கில் இருந்து தமிழர்களை விரட்டி விட வேண்டும் அல்லது ஒழித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தைக் கருவாகக் கொண்டவையே.

இந்த நோக்கமும், கருவும் இன்று நேற்று உதித்தவை அல்ல. கடந்த ஐம்பது வருடப் பழமை கொண்டவை. கிழக்குக்குத் தமிழர்கள் தனியாகச் சொந்தம் கொண்டாட இடம் வைத்தலாகாது என்ற விசத்தன்மையுடன் உருவாக்கப்பட்டவை.

எனவே தான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் போதெல்லாம், கிழக்கைத் தவிர்த்துக் கொள்ள அரசு முயன்றது உண்டு; இப்போதும் முயன்று வருகிறது. ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரையில் பிரச்சினையின் முழுமையக் கருவும் கிழக்கேயாம்.

கிழக்குத் தமிழர்கள் தமது சொந்த மண்ணில் உரிமைகளுடனும், பாதுகாப்புடனும் தம்மைத் தாமே ஆளும் நிலையை உருவாக்குவதே தமிழர் போராட்டங்களின் முக்கிய மூலநோக்கம் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். அங்கு முஸ்லிம் அங்கத்தை (Muslim Factor) வில்லங்கம் எடுக்கச் செய்து, அதனை ஒரு கருவியாக்கி தமிழர்களை கிழக்கைத் தவிர்க்கச் செய்யும் அரசின் முயற்சிகள், தமிழர்களுக்குத் தெரியாமல் இல்லை.

கொழும்பு அரசுகள் தங்களைக் கருவியாக்கி வருவது இனப்பிரச்சினையை ஒரு தொடர் நிழ்வாக்குவதற்கான, எப்போதும் எரிந்து கொண்டிருக்கச் செய்வதற்கான தந்திரம் என்பதை கிழக்கு முஸ்லிம்கள் எப்போது உணரப்போகிறார்களோ?

# 9மாத இடைவெளியின் பின் மீண்டும் குஷ்ட நோயாளருக்குச் சிகிச்சை

அனலைதீவு, மார்ச் 14

ஒன்பது மாத இடைவெளியின் பின்னர் குஷ்டரோகச் சிகிச்சை நிலையம் தீவுப் பகுதியில் மீண்டும் இயங்க உள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பமான நாளில் இருந்து சிகிச்சை நிலையம் இயங்கவில்லை.

இதனால் தீவுப்பகுதி குஷ்ட நோயாளர்கள் சிகிச்சை வசதி இன்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி இருந்தனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது செவ்வாய்க்கிழமைகளில் குஷ்டரோக நோய்க்கு சிகிச்சை அளிக்கப்பட உள்ளது.

காலையில் புங்குடுதீவு வைத்தியசாலையிலும், மாலையில் வேலணை வைத்தியசாலையிலும் சிகிச்சை அளிக்கப்படும். [இ-18]

## பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டி நடாத்த கல்வி அலுவலகம் ஏற்பாடு செய்துவருகிறது. பாடசாலை மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும் நடத்தப்பட்டு இறுதி போட்டி மாவட்டமட்டத்தில் மே மாதம் நடத்தப்படும். [இ-3]

## ரஞ்சன் மறைவால் ஜே.வி.பி. மீண்டும் தலைதூக்கும் நிலை

கொழும்பு மார்ச் 14

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவின் மறைவைப் பயன்படுத்தி தென்பகுதியில் ஜே.வி.பி. யினரின் தீவிரவாத நடவடிக்கைகள் மீண்டும் தலைதூக்கலாம் என்று அரச வட்டாரங்கள் கருதுகின்றன.

இதனைத் தொடர்ந்து, தென்பகுதியில் உள்ள பாதுகாப்புப் படைகள் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளன என்று கொழும்பில் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-எ]

## ரஞ்சனின் தனிப்பட்ட எதிரிகள் மீதும் பொலிஸார் விசாரணை

கொழும்பு, மார்ச் 14

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் தனிப்பட்ட எதிரிகளாகக் கருதப்படுவோர் மீதும் பொலிஸார் தற்போது விசாரணைகளை நடத்தி வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

இதனிடையில் — இக்கொலைக்கும் இதுதொடர்பாகக் கொழும்பில் கைதான தமிழ் இளைஞர்களில் எவருக்கும் தொடர்பு இல்லை என்பது விசாரணையில் தெரிய வந்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் காரணமாக, கைதான அனைத்துத் தமிழ் இளைஞர்களும் விரைவில் விடுதலை செய்யப்பட உள்ளனர் என்றும் பொலிஸார் சொன்னார்கள். [இ-எ]

## அகதிகள் ஸ்தானிகராலயம் புனர்வாழ்வு வேலை தொடரும்

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஐ.நா. அகதிகள் ஸ்தானிகராலயம் வடக்கில் தொடர்ந்தும் புனர்வாழ்வு வேலைகளை மேற்கொள்வதென முடிவு செய்துள்ளது.

இந்த அமைப்பு பல்வேறு புனர்வாழ்வு வேலைகளை மேற்கொண்டிருந்தது.

அடுத்த மாதம் 31 ஆம் திகதியுடன் இந்த அமைப்பின் காலப்பகுதி முடிவடைந்த போதும், அவசர புனர்வாழ்வு வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் தொடர்ந்தும் இயங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதே நேரம் திருகோணமலையில் இயங்கிய அலுவலகம் மூடப்பட்டு விட்டது. மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலும் மட்டுமே இனி அலுவலகங்கள் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## மகாசிவராத்திரிச் சிறப்பு

இந்து சமயத்தவர்கள் இறை வழிபாட்டிற்காகத் தேர்ந்தெடுத்த தினங்களில் முக்கியமானது மகாசிவராத்திரி தினமாகும். சக்தியை ஒன்பது இரவுகள் வழிபட்டுப் பெறும் பயனை, சிவனை ஒரு இரவு வழிபடுவதன் மூலம் பெற முடியும் என்பது நம்பிக்கை. சிவனுக்குரிய பல விசேடங்கள் அமைந்தது இத்தினம்.

மகாபிரளயகாலம் முடிவுற்ற வேளையில் இறைவன் அருவமாக இருந்தார். மக்களின் கண்களுக்குத் தோன்றவில்லை. இதனால் பூசை வழிபாடு இல்லாதொழிந்தது. உலகில் சீலன்கள் அழியும் நிலையும் ஏற்பட்டது.

இதனைக் கவனித்த அன்னையாகிய சக்தி உலகையெல்லாம் காப்பாற்றும்படி இறைவனாகிய சிவனை வேண்டினாள்.

உருவமற்ற தம்மை மக்கள் வழிபட முடியாது என்பதை உணர்ந்த சிவன் பூசிப்பதற்கு ஏற்றவாறு அருவமாகவும், உருவமாகவும் உள்ள சிவலிங்க வடிவமாகத் தோன்றினார்.

அங்கங்கள் இன்மையால் அருவமாகவும் அடிமுடியற்றிருப்பதனால் உருவமாகவும் தோன்றிய சிவலிங்கத்தை அன்னையாகிய [illegible] உலகம் [illegible] நான்கு சாமங்களிலும் பூசனை புரிந்தாள். சக்தியின் பூசையில் மகிழ்ந்த இறைவனிடம்,

"அடியேன் பூசித்த இத்தினத்தில் தங்களை உள்ளன்புடன் வணங்குபவர்கள் நற்கதியடையும் வரமருளவேண்டும்" என்று தேவி வேண்டினாள் இறைவனும் அவ்வாறே வரமருளினார். இவ்வாறு அம்பிகை வரம்பெற்ற இரவே சிவராத்திரியாகும். பிரமவிஷ்ணுக்களின் அகந்தையை அடக்க இறைவன் சோதிவடிவமாகத் தோன்றிய தினம் எனவும் கொள்ளப்படுகிறது.

சிவராத்திரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் முதல் நாள் ஒரு பொழுதுண்டு, விரதமிருந்து, சிவராத்திரி தினத்தன்று உபவாசம் இருந்து சிவாலய தரிசனம் செய்து நித்திரையின்றி நான்கு சாமங்களிலும் இறைவனைத் தரிசனம் செய்து மறுநாள் உணவு உண்ணுதல் வேண்டும் சிவராத்திரி தினத்தன்று நீரேனும், பாலேனும் அருந்துதல மத்திமமாகும். இத் தினத்தில இரவு 12-30 மணி வரையும் லிங்கோற்பவ காலம் எனப்படும். முழு இரவும் நித்திரை விழிக்க முடியாதவர்கள் லிங்கோற்பவ காலம் வரையிலேனும் நித்திரை [illegible]

இ. சிவபாலசுந்தரம் பிள்ளை.

## பூநகரியில் 3 ஆம், 4 ஆம் கட்ட நிவாரணம்

பூநகரி, மார்ச் 14

பூநகரிப் பகுதியில் 3ஆம், 4ஆம் கட்ட நிவாரணம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளை உதவி அரசாங்க அதிபர் திரு வீ. எஸ். கனரத்தினம் மேற்கொண்டுள்ளார் இந்த வாரம் அளவில் இவை வழங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பூநகரிப் பகுதியில் உள்ள 19 கிராம சேவையாளர்களும் இதற்கான பட்டியல்களைத் தயாரித்து உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்துள்ளனர். [இ]

## இன்று சிவராத்திரி

யாழ்ப்பாணம் மார்ச் 14

மகா சிவராத்திரி இன்று குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களிலும் பக்தி உணர்வுடன் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன்கோவில் உட்பட பல சிவாலயங்களிலும் இன்றைய தினமே சிவராத்திரி அனுஷ்டிக்கப்படுகிறது!

விசேட அபிஷேகங்கள், நான்கு சாமப் பூசைகள், கூட்டுப் பிரார்த்தனைகள், சமயச் சொற்பொழிவுகள் இன்று ஆலயங்களில் இடம்பெறுகின்றன.

★ ★ ★

உரும்பராய் ஞானவைரவர் சுவாமி கோவிலில் சிவராத்திரியையொட்டி இன்று இரவு தேவாரங்கள் பற்றிய ஆய்வுக் குழு விவாதம் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறுகின்றன [ ]

## ஜப்பான் வழங்கிய அம்புலன்ஸ்கள்

யாழ்ப்பாணம் மார்ச் 14

ஜப்பானிய அரசாங்கம் யாழ்ப்பாணம், திருமலை மாவட்டங்களுக்கு இரண்டு அம்புலன்ஸ் வாகனங்களை வழங்கியது.

அந்த அந்த மாவட்டங்களில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கங்களுக்கே இந்த அம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள அம்புலன்ஸ் ஏற்கனவே வந்து சேர்ந்துவிட்டது. [இ-3]

## பட்டதாரி ஆசிரியர் சம்பளம்

தற்போது ஆசிரியர் சேவையிலுள்ள 1988 ஆம் ஆண்டுக்குப்பின்னர் பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கும், பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களுக்கும் விரைவில் பட்டதாரி ஆசிரியச் சம்பளம் வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான சுயவிவரக் கோவைகளைப் பற்றிய விவரங்களை உடனடியாக அனுப்புமாறு சகல கோட்டக்கல்வி அலுவலகங்களையும் கல்வி அமைச்சு பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-118]

## சுன்னாகம் மக்கள் வங்கி கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

மீளக் குடியமர்தல் 2 ஆம் கட்ட நிவாரணம் ரூ. ஆயிரம், உற்பத்தித்திறன் முயற்சி நன்கொடை ரூபா நாலாயிரம் ஆகியவற்றை இதுவரை எடுக்காத வறியவர்களுக்கான மக்கள் வங்கி சுன்னாகம் கிளையில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமையும், 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் வழங்கப்பட உள்ளன.

16 ஆம் திகதி உரும்பராய், குப்பிளான், சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், ஏழாலை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும்—

17 ஆம் திகதி தாவடி, உடுவில், சங்குவேலி, இணுவில், கந்தரோடை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன. [இ]

## கணக்காய்வு அத்தியட்சகர் பதவி

கொழும்பு மார்ச் 14

இலங்கை கணக்காய்வுச் சேவையில் 2 ஆம் வகுப்பு, 2 ஆம் தரக் கணக்காய்வு அத்தியட்சகர் பதவிகளுக்கு கணக்காய்வாளர் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்ப முடிவுத் திகதி 17-5-1991 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 15 - 02 - 1991 வர்த்தமானியில் இதன் விவரங்கள் வெளியாகியுள்ளன.

இதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 27-7-1991 இல் நடத்தப்படும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். [இ-எ]

## ஒழுக்க வாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்-மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே ஒழுக்கத்தைப் பேணும் வகையில் "ஒழுக்க வாரம்" அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

பாடசாலை மாணவர்கள் பாடசாலையில் பேண வேண்டிய நடைமுறைகளை விளக்கும் வகையில் ஒழுக்க வாரம் அனுஷ்டிக்கப்படும். [இ-8]

## விவசாயிகளுக்குக் கடன்

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு உப உணவுப் பயிர்ச்செய்கைக்கென சாவகச்சேரி இலங்கை வங்கி, விவசாயக் கடன்களை வழங்கி வருகிறது.

விவசாய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையுடன் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் வங்கியுடன் தொடர்பு கொண்டு கடன் படிவங்களை பெற்றுக் கொள்ளலாமென வங்கி முகாமையாளர் தெரிவித்தார். [இ-117]

## பலஸ்தீனர் 11 அம்ச யோசனை

ஜெருசலம், மார்ச் 14

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில வாழும் பலஸ்தீனியர்களின் தலைவர்கள் பதினொரு அம்ச யோசனை ஒன்றை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கரிடம் சமர்ப்பித்தனர்.

பலஸ்தீனிய நாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் — பலஸ்தீன விடுதலை இயக்கம் பலஸ்தீன மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே இயக்கம் என்று அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அந்த யோசனையில் கூறப்பட்டுள்ளது. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பகுதியிலிருந்து 26 ஆசிரியர்கள் இடமாற்றம்

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து 26 ஆசிரியர்கள் யாழ் மாவட்டத்துக்கு மே மாதம் முதலாம் திகதி முதல் இடமாற்றம் பெற்றுள்ளனர். அந்த ஆசிரியர்கள் விவரம் வருமாறு:-

செல்வி கோ. பரமேஸ்வரி, திருமதி சசிகலா, க. முத்துலிங்கம், க. மகாகணபதி, செல்வி ப. திருநாவுக்கரசு, செல்வி கு. தம்பையா, எஸ். கே. ஸ்ரீரங்கநாதன், திருமதி சி. பாலகுரு, திருமதி ர குணதாசன், திருமதி ச. ஜெய பாலசிங்கம், தே. யோகராசா, திருமதி இ. விக்கினேஸ்வரன், திருமதி ப. வாகீஸ்வரி, செல்வி ம. சுப்பிரமணியம், திருமதி வி. நடேசமூர்த்தி, செல்வி தி. மனோரஞ்சினி, ச குகதாசன், கதிரவேலு டகீரதி, திருமதி அ. வ. மக்ஸ்வெல், செல்வி ப. தியாகராசா, ந. விஜேந்திரன், வண. சகோ. அன்ரனிற்ற மாக்கு, திருமதி இ. சிவஞானம், திருமதி தே. லோகநாதன், செல்வி ப. மயில்வாகனம், செல்வி தா. கோகிலமணி. [உ-3]

# உள்நாட்டு சண்டையால் பஸ்ரா நகர் அதிர்கிறது!

ஈராக் துறைமுக நகரான பஸ்ராவைக் கிளர்ச்சிப் படைகளிடமிருந்து மீண்டும் கைப்பற்றுவதற்காக கடும் தாக்குதல்களை சதாம் ஹுசேனின் படைகள் ஆரம்பித்திருப்பதாக ஈரானிய செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

பஸ்ராவில் நேற்று முழுவதும் பலத்த குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன என்றும்-

பஸ்ரா அருகே அமைந்துள்ள ஈரானிய நகரங்கள் அதிர்ந்தன என்றும் ஈரானிய செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. [உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கௌரியம்மாள் தாமோதரம்பிள்ளை

சாவகச்சேரி டச் வீதியைச் சேர்ந்த திருமதி கௌரியம்மாள் தாமோதரம்பிள்ளை அவர்கள் 13 03 1991 அன்று காலமானார்.

அன்னார் க. தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய நில அளவை அத்தியட்சர்] அவர்களின் அன்பு மனைவியும் எஸ். கே. ரி. கணேஷன் [பரந்தன், இரசாயனக் கூட்டுத்தாபனம்], வைத்திய கலாநிதி கே. ரி. சிவபாதம் (பிராந்திய தொற்று நோயியலாளர், யாழ்ப்பாணம்], ரி கனகசபை [கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கொழும்பு], மல்லிகா, சீதா, [சாவித்திரிதேவி ஆகியோரின் தாயாரும், விஜயலட்சுமி, முகுந்தினி, ரதி, சுப்பிரமணியம் [நைஜீரியா], கனகரத்தினம் [கனடா], பத்மநாதன் (பம்பாய்], ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற சரவணமுத்து, பொன்னம்பலம், வள்ளியம்மை ஆகியோரின் சகோதரியும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14 03 1991 அன்று மாலை 3 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:

டச் வீதி, சாவகச்சேரி.

வைத்திய கலாநிதி கே. ரி. சிவபாதம்

[15908]

## வெற்றிவேலு செல்லையா

கோப்பாய் தெற்கு கும்பப்பிள்ளையை சேர்ந்த வெற்றிவேலு செல்லையா 12 - 3 - 1991 செவ்வாய்க்கிழமை காலை சிவபதமடைந்தார்.

இவர் இராசம்மாவின் [வள்ளியம்மை] அன்புக் கணவரும் குணரத்தினம் [ஜேர்மனி], இராசரத்தினம் [துறைமுக அதிகார சபை], யோகரத்தினம் [Fernteа-Ltd - Col. செல்வரத்தினம், ஜெயரத்தினம், பாலசுந்தரம், சண்முகரத்தினம் (கனடா], ஜெயபரரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும். நாகேஸ்வரி [ஜேர்மனி], குணபூசணி, அருந்தவதேவி, இராஜேஸ்வரி, தவயோகம், கைலேஸ்வரி, குமுதினி [கனடா], உமாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் இரட்ணேஸ்வரி, இராஜேஸ்வரி, குணரஞ்சன், ஞானரஞ்சன், கேமலதா, கெலன்ராஜ், கெலன்குமார், கெலன்சுரேஸ், கெலன்சங்கர், யோகநாதன், யோகராஜன், யோகேஸ்வரன், செல்வமுரளி, றஜனி, செல்வமோகன், செல்வஜிந்தன், ஜெயந்தி, ஜெயரஞ்சன், ஜெயமோகன், சுதாகர், சுபாசினி, அன்ரா, வின்ரா, பெற்ரா, தெய்யா, கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேரனும் தஸ்மினி, யாழினி ஆகியோரின் அன்புப் பூட்டனும் தங்கம்மாவின் அன்புச் சகோதரனும் ஆவார்,

ஈமைக்கிரியைகள் இன்று [14 - 03 - 91] 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:

வெ, செ ஜெயபாலரத்தினம்

இரத்தின வாசம்
கோப்பாய், தெற்கு,
கோப்பாய்

[16113]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்வி நிர்வாக பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கை கல்வி நிர்வாகச் சேவை மூன்றாம் வகுப்புக்கு அதிகாரிகளைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித் திகதி இம் மாதம் 8 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் 8 3.91 ஆம் திகதிய வர்த்தமானியில் விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாசம் 25 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப்பதாகக் கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கு ஆசிரியர்கள், அதிபர்களும் விண்ணப்பிக்க முடியும். [உ-எ]

## இந்திய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றது.

இந்த நாடாளுமன்றம் சரியாக 466 நாட்கள் மட்டுமே செயற்பட்டது.

எதிர்வரும் மே மாத இறுதியில் புதிய தேர்தல் நடத்தப்படும் என்று காபந்து பிரதமர் சந்திரசேகர் நேற்றுத் தெரிவித்தார்.

இந்தப் பொதுத் தேர்தலில் 52 கோடி 10 லட்சம் பேர் வாக்களிக்கும் தகுதியைப் பெற்றிருக்கின்றனர். [உ-எ]

## வ. பி. போ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டிப்போக்களைச் சேர்ந்த பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

★ கோண்டாவில், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு டிப்போக்களின் பஸ்கள் சேவையில் ஈடுபடாததால் அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க மத்திய போக்கு வரத்துச் சபையிடம் பணம் இல்லை.

★ இதனால் இந்த டிப்போக்களை மூடி அங்கு பணியாற்றும் ஊழியர்களை அனுராதபுரம், குருநாகல், கொழும்பு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்ய உள்ளோம்

★ முதற் கட்டமாக 100 சாரதிகளும், 100 கண்டக்டர்களும் இடமாற்றம் செய்யப்படுவர்

—என்று தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க-

சுய விருப்பத்தின் கீழ் ஓய்வு பெறும் சலுகைகள், சாரதி, கண்டக்டர், தொழில் நுட்ப பிரிவு ஊழியர்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளன என்றாலும் இந்தச் சலுகைகளை மேற்படி மூடப்படவிருக்கும் டிப்போ ஊழியர்கள் அனைவருக்கும் வழங்கி அவர்கள் ஓய்வுபெற இடமளிக்குமாறு யாழ். அதிகாரிகள் ம.போ.ச. தலைவரிடம் கோரியுள்ளனர்.

இந்தச் சலுகைகள் நிர்வாகப் பிரிவு தரத்தில் உள்ளவர்களுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளதால், அந்த தரத்தில் உள்ளவர்கள் ஓய்வு பெற விண்ணப்பிக்கவிருப்பதாக அறியவந்தது. [ஓ-3]

## கும்புறுப்பிட்டி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொலையுண்ட ஐவரும் ஆவர்.

கொலையுண்ட இரு பெண்களும் படையினரால் மானபங்கப்படுத்தப்பட்டனர் என்றும்-

சம்பவம் நடந்த பகுதியிலுள்ள வீடுகளில் படையினர் கொள்ளைகளில் ஈடுபட்ட [illegible] தெரிவிக்கப் பட்டது.

# பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் ரூ. 150 அலவன்ஸ் பெறுவர்

1989 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு மாதம் 150 ரூபாவை அலவன்ஸாக வழங்க அரசு முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் 6 ஆயிரம் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் பயனடைவர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப் பயிலுநர் ஆசிரியர்கள் தங்கள் இரண்டு ஆண்டு கால சேவையை முடித்துக் கொண்ட பின்னர் கல்விச் சேவை ஆணைக்குழு நடத்தும் பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டும். அதன் பின்னரே இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது [உ-எ]

# தமிழக அரசு கலைப்பு ராஜீவுக்கு ஆச்சரியமாம்!

புதுடில்லி, மார்ச் 14

பிரதமர் சந்திரசேகர் தமது சொந்த எண்ணத்தின்படியே தமிழக அரசைக் கலைத்தார். தமிழக அரசு கலைப்புக்கும் இந்திரா காங்கிரஸுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது.

நேற்று புதுடில்லியில் நடந்த இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் கூட்டத்தில் பேசுகையில் திரு. ராஜீவ் காந்தி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தமிழ்நாட்டு நிலைமை பற்றி பிரதமர் சந்திரசேகர் என்னுடன் விவாதித்தார்.

தமிழ்நாடு மாநிலத்தின் நிலைமை மிக மோசமாக இருப்பதை தாமே உணர்ந்திருப்பதாக அவரே அப்போது என்னிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆட்சியை அமுலுக்குக் கொண்டுவர ஆளுநரின் சிபார்சு தேவையாகும் அப்படி இருக்கையில், ஆளுநரின் சிபார்சு இன்றியே அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் ஜனாதிபதி ஆட்சியை தமிழகத்தில் திரு. சந்திரசேகர் கொண்டுவந்து விட்டார்.

—இப்படி திரு. ராஜீவ் காந்தி கூறினார், [உ-எ]

## திட்டமிட்ட ஏற்பாடாம்

புதுடில்லி, மார்ச் 14

பிரதமர் சந்திரசேகரின் ராஜினாமா முன்கூட்டியே நன்கு திட்டமிடப்பட்ட ஏற்பாடு தான் என்று இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

எதிர்க்கட்சியினரும் சபாநாயகரும் சேர்ந்து வகுத்த திட்டம் ஒன்றின் ஒரு பகுதி தான் சந்திரசேகரின் பதவி விலகல் என்றும் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார். [உ-எ]

## அடிப்படை உரிமையை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வதைக் கண்டித்து. மன்னிப்புச் சபை முன்னர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கை—

அரசின் மீது மட்டுமே குற்றஞ்சாட்டுவதாகவும், ஆயுதக்குழுக்கள் மனித உரிமைகளை மீறுவதை நியாயப்படுத்துவதாகவும் தூண்டுவதாகவும் அமைந்திருந்ததாக ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது விளக்கத்தில்—பதிலில் தெரிவித்திருந்தது.

ஸ்ரீலங்காவின் அந்த விளக்கத்துக்கு பதிலளிக்கும் வகையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் இயன்மார்ட்டின், ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோனுக்கு இப்போது கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசாங்கங்களையும், அவற்றை எதிர்க்கும் ஆயுதக் குழுக்களையும் சர்வதேச மன்னிப்புச்சபை ஒன்றாகக் கருதவில்லை.

அரசாங்கங்களைப் பொறுத்தவரை அவற்றுக்கு தத்தமது நாட்டு பிரஜைகளுக்கும், சர்வதேச சமூகத்திற்குமான விசேட கடப்பாடு உள்ளது. அதாவது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் அடங்கியுள்ள அடிப்படை அம்சங்களை அரசுகள் பேண வேண்டும்.

ஸ்ரீலங்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் தவறானவையாகும். அரசாங்கத்தின் அடிப்படைப் பிரச்சினையாக விளங்கும் மனித உரிமைகளைப் பேணி மதிக்கும், கடமையிலிருந்து வழுவியனவாகவும் அவற்றைக் கொள்ள வேண்டியுள்ளது.

நீங்கள் குற்றஞ்சாட்டியவாறு ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளை நாம் உற்சாகப்படுத்தியதோ, நியாயப்படுத்தியதோ கிடையாது. அதற்கு மாறாக நாம் அவற்றின் நடவடிக்கைகளையும் மிகத் தெளிவாகக் கண்டித்துள்ளோம்.

எதிர்ப்பு அணி ஆயுதக் குழுக்கள், அரசாங்கப் படைகளை தவிர்க்கமுடியாத வகையில் கொலை, மற்றும் கட்டு மீறிய நடவடிக்கைகளுக்கு தூண்டுவதாக உங்களால் முன்வைக்கப்பட்டுள்ள வாதம். தவறானதும் ஆபத்தானதும் ஆகும்.

எமது அறிக்கைகளில் அக்கறைக்குரிய கொலைகளாக நாம் குறித்திருப்பவை, அரசாங்கப் படையினர் பீதி காரணமாகச் செய்திருக்கும் கொலைகளை அல்ல. திட்டமிட்டு வேண்டுமென்றே செய்யப்பட்ட கொலைகளையே ஆகும். [அ-8]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் இராசநாயகம் நாதசிங்கம்பிள்ளை

[ஓய்வுபெற்ற Engine Driver]

1991 - 2 - 12 ஆம் திகதி இறைவடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை 14-3-1991 வியாழக்கிழமை மதி இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,

மல்லாகம். [16114]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org